DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW.11

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | Dr. **ஸ்ரீ மோகன கண்ணா** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 16.03.2026.

(Accused present. )

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் முசிறி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.3.2024ம் தேதி 11.00 மணிக்கு நான் துறையூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, துறையூர் காவல் ஆய்வாளர் கா.நி.கு.எண்.67/2024 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி, காவலர் தமிழரசன் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினார். அதன்படி பகல் 11.00 மணியளவில் நான் பிரேத பரிசோதனை செய்ய தொடங்கினேன். பிரேத விரைப்பு தன்மை கை மற்றும் கால்களில் காணப்பட்டது. கண்கள் பாதி திறந்த நிலையிலும், வாய் பாதி திறந்த நிலையிலும் காணப்பட்டது.

பிரேதத்தில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள்,

1. கபால மண்டையில் வெட்டுகாயம் 7 x 3 x 2 செ.மீ. அளவில் இடது முன்னதலையில் காணப்பட்டது.
2. வலது பக்க தாடையில் வெட்டுக்காயம் 4 x 2 x 2 செ.மீ. அளவிலும், தாடை எலும்பு வெளியில் தெரிந்த நிலையில் காணப்பட்டது.
3. வலது முழங்கையில் வெட்டுக்காயம் 4 x 3 x 2 செ.மீ. அளவில் காணப்பட்டது.
4. இடது தோள்பட்டையில் வெட்டுக்காயம் 7 x 2 x 2 செ.மீ. அளவில் காணப்பட்டது.
5. வலது தோள்பட்டையில் வெட்டுக்காயம் 4 x 1 x 1 செ.மீ. அளவில் காணப்பட்டது.
6. இடது ஆள்காட்டி விரலில் வெட்டுக்காயம் 5 x 1 x 1 செ.மீ. அளவில் காணப்பட்டது.
7. இடது முட்டியில் 2 x 2 செ.மீ. சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
8. வலது முட்டியில் 1 x 1 செ.மீ. சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
9. வலது பக்க முதுகில் வெட்டுக்காயம் 3 x 2 x 2 செ.மீ. அளவில் காணப்பட்டது.
10. வலது மற்றும் இடது பக்க முதுகில் பல்வேறு சிறிய வெட்டுக்காயங்கள் 1 x 1 x 1 செ.மீ. அளவில் காணப்பட்டது.

உடலை உட்கூராய்வு செய்து பார்த்ததில், கபாலத்தை திறந்து ஆய்வு செய்தபோது இடது பக்க கபால மண்டையில் எலும்பு முறிவு காணப்பட்டது. மேலும் பின்பக்க கபால மண்டையில் எலும்பு முறிவு காணப்பட்டது. மூளை

கன்றிய நிலையில் இருந்தது. மற்ற உடல் உறுப்புகள் சீராக இருந்தது. உடல் உறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. இரசாயன பகுப்பாய்வு முடிவு பெறப்பட்டு, இறப்பிற்கான காரணம், உடலில் முக்கிய உறுப்புகளில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் கபாலத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவு ஆகியவைகளால் இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய கருத்துரை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8.,** வேதியியல் அறிக்கை **அ.சா.ஆ.9.**, என்னிடம் காட்டப்படும் அருவாளால் ஒருவரை தாக்கும்போது அவருக்கு மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆய்வாளர் என்னிடம் எந்த ஒரு ஆயுதத்தை காட்டி விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் என்னிடம் ஆயுதத்தை காட்டினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆயுதத்தை காட்டினால் ஆயுதத்தை வரைபடமாக வரைந்து பிரேத பரிசோதனை அறிக்கையுடன் இணைத்து வைத்திருப்போம் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆயுதம் எதையும் என்னிடம் காட்டப்படாத காரணத்தினால் வரைபடம் வரையவில்லை என்றாலும், அவ்வாறு காட்டியிருந்தால் ஆய்வாளர் விசாரணையின்போது ஆயுதத்தை காட்டினார் என்று சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.16 18:20:44 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.